மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

அ.வ.எண்.53/2023

வாக்குமூலம்: பி.வா.சா.3 – கனகசபாபதி

18.10.2024: சாட்சி ஆஜர். சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை :

1) 1, 2 பிரதிவாதிகள் வீட்டிற்கு எந்த பக்கம் வாதியின் வீடு உள்ளது என்றால் தென்புறம் உள்ளது. வாதி வீடும், 1, 2 பிரதிவாதிகள் வீடும் அருகருகே ஒட்டித்தான் உள்ளது என்றால் சரிதான். வாதி இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார் என தெரியுமா என்றால் பாதைக்காக தாக்கல் செய்துள்ளார். மேற்படி விபரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் ஊருக்குள் பேசிக் கொண்டார்கள். வாதியும், 1, 2 பிரதிவாதிகளும் பங்காளிகளா என்றால் சரிதான், சித்தப்பா, பெரியப்பா மக்கள். நான் சொல்வதுபோல் வாதியும், 1, 2 பிரதிவாதிகளும் சித்தப்பா, பெரியப்பா மக்கள் அல்ல என்றாலும், 1, 2 பிரதிவாதிகள் கேட்டுக் கொண்டதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2) வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளின் வீடுகளின் புல எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு இந்த வழக்கை பற்றி எதுவும் தெரியாது என்றாலும், 1, 2 பிரதிவாதிகளுக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளின் வீட்டில் உள்ள மின் இணைப்பு எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதியின் வீட்டின் நீள, அகலங்களும், 1, 2 பிரதிவாதிகளின் வீட்டின் நீள, அகலங்களும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு சொத்து விபரம் எனக்கு தெரியாது என்றாலும், 1, 2 பிரதிவாதிகள் கேட்டுக் கொண்டதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S KABALEESWARAN

Digitally signed by S KABALEESWARAN
Date: 2024.10.18 17:37:27 +0530